


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ மே. 13, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 218 ❖ ரூ.10

## எடப்பாடி பழனிசாமியை தவிர்த்து விட்டு அதிமுக ஒன்றுபடும்

# சவால்

## இபிஎஸ் ஒரு சண்டிக்குதிரை எதற்கும் பயன்படாது. தினகரன், சசிகலா உள்ளிட்டவர்களை தவிர்த்தால் அதிமுக ஆட்சிக்கு வர முடியாது: ஓபிஎஸ் ஆதரவாளர் வைத்திலிங்கம்

**தஞ்சாவூர், மே. 13–**

**அதிமுகவை அழிக்க நினைக்கும் எடப்பாடி பழனிசாமியைத் தவிர்த்து விட்டு, அதிமுக ஒன்றுபடும் என்று ஓபிஎஸ் ஆதரவாளரான வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.**



மாநிலங்களவை முன்னாள் உறுப்பினரும், ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினருமான வைத்திலிங்கம் தஞ்சாவூரில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: "அதிமுக ஒருங்கிணைப்பாளரான ஓ. பன்னீர்செல்வம், அமமுக பொதுச் செயலாளரான தினகரனை சந்தித்துள்ளார். இந்த சந்திப்பின்போது, ஓ. பன்னீர்செல்வம், பண்ருட்டி ராமச்சந்திரன் மட்டுமேசென்றநிலையில், பிரபாகரன், மனோஜ் பாண்டியன் இல்லாமல் சந்தித்ததில் அவர்களுக்கு உடன்பாடு இல்லை என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அதிமுக ஒன்றுபட வேண்டும்; அதிமுக தமிழகத்தில் மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதால்தான் ஓபிஎஸ், தினகரனைச் சந்தித்தார். ஆனால், இந்த சந்திப்பில் எங்களுக்கு விருப்பமில்லை, நாங்கள் அதில் வேறுபட்டு இருக்கிறோம் என முன்னாள் முதல்வராக இருந்த இ.பி.எஸ்., கற்பனையாக பேசுவது, அவர் வகித்த பதவிக்கு அழகல்ல. ஏதோ ஒரு சூழ்ச்சியால் அவர் முதல்வரானார். தற்போது, மாயமானும், மண்குதிரையும் நம்பி சென்றால் கரை சேர முடியாது என இபிஎஸ் கூறியுள்ளார். அந்த மாயமான் இல்லாவிட்டால்,இபிஎஸ் முதல்வராகி இருக்க முடியாது. தூதுவிட்டு, காலில் விழுந்து, முதல்வராகி பிறகு அவர்களையே மாயமான் என்றும்,துரோகி என்றும் வாய்க்கு வந்தபடி பேசும் இபிஎஸ் கடந்த காலத்தை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தினகரன், சசிகலா ஆகியோரின் கடைக்கண் பார்வை தன் மீது படாதா என ஏங்கிக்கொண்டிருந்த இபிஎஸ், அதிகார பலம், பண பலத்தைக் கொண்டு, அதிமுகவை தனது சொத்தாக மாற்ற நினைக்கிறார். இதை தொண்டர்கள் அனுமதிக்கமாட்டார்கள். மண் குதிரை எனக் கூறும், இபிஎஸ் ஒரு சண்டிக்குதிரை. சண்டிக்குதிரை எதற்கும் பயன்படாது. தினகரன், சசிகலா உள்ளிட்டவர்களை தவிர்த்தால் அதிமுக ஆட்சிக்கு வர முடியாது. இரட்டை இலை சின்னம் கிடைத்தும், எட்டு தேர்தல்களில், இபிஎஸ் படுதோல்வியை சந்தித்தார். இரட்டை இலை சின்னம் இல்லாவிட்டால்இபிஎஸ்–க்கு இரண்டு சதவீதம் கூட வாக்கு இருக்காது. ஆனால் தொண்டர்கள் ஓபிஎஸ், தினகரன் பக்கம்தான் உள்ளனர். ஓபிஎஸ், தினகரனை சந்தித்தை அதிமுக தொண்டர்கள் 95% பேர் வரவேற்றுள்ளனர்.

சசிகலா, தினகரனை அன்றைய தினம் எதிர்த்து வெளியில் வந்தது அரசியல். ஆனால் தற்போது ஒன்று பட்டால் தான் உண்டு வாழ்வு என்பதால் இணைந்துள்ளோம். இபிஎஸ் பதவி மோகத்தால் அதிமுகவை அழிக்க நினைக்கிறார். அதிமுகவை யாராலும் அழிக்க முடியாது. இபிஎஸ்-சை தவிர்த்து விட்டுஅதிமுகஒன்றுபடும். ஒநாய் கூடாரத்தில் உள்ள ஆட்டுக்குட்டிகள் எல்லாம் எப்போது வெளியில் வரலாம் என காத்துக்கொண்டிருக்கிறது. ஜெயக்குமார் விளையாட்டு பிள்ளை. அவரைப் பற்றி கருத்து சொல்ல நான் விரும்பவில்லை.

சசிகலாவை சந்தித்த பிறகு, ஆங்காங்கே பிரிந்து இருப்பவர்களை ஒன்று சேர்த்து, வரும் 2026ம் ஆண்டு அதிமுக ஆட்சிக்கு வரும். தற்போதுள்ள ஆட்சியில் ஜெயலலிதா கொண்டுவந்ததிட்டங்கள் முடக்கப்பட்டுள்ளதால், மீண்டும் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்த அதிமுக ஆட்சிக்கு வர வேண்டும் என்பதற்காகவே ஒன்றிணைகிறோம். அரசியலில் இன்று ஒன்று நடக்கலாம், நாளை ஒன்று நடக்கலாம், நாளை நடப்பது எங்களுக்கு நல்லதாகவே நடக்கும்" இவ்வாறு வைத்திலிங்கம் தெரிவித்தார்.

## புதுக்கோட்டை கம்பன் கழகத் தலைவர் ராமச்சந்திரன் தாயாருக்கு தமிழக அமைச்சர்கள் நேரில் அஞ்சலி





**புதுக்கோட்டை , மே. 13–**

புதுக்கோட்டை கம்பன் கழகத் தலைவர் எஸ்.ஆர் என்கிற ராமச்சந்திரன் தாயாரின் உடலுக்கு தமிழக அமைச்சர்கள் ரகுபதி உள்ளிட்ட மூன்று பேர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

புதுக்கோட்டை மாவட்டம், முத்துப்பட்டிணம் கிராமம் காலம் சென்ற பெரி.சண்முகம் அம்பலகாரர் மனைவியாரும், தொழிலதிபரும் புதுக்கோட்டை கம்பன் கழகத் தலைவருமான எஸ்.ராமசந்திரன் (எஸ்.ஆர்) தாயாருமான முத்தாத்தாள் அம்மாள் (11.05.2023) வியாழக்கிழமை இரவு இயற்கை எய்தினார். அம்மையாரின் இறுதி ஊர்வலம் நல்லடக்கம் நேற்று வெள்ளிக்கிழமை (12.05.2023) புதுக்கோட்டை அறந்தாங்கி சாலையில் உள்ள முத்துப்பட்டிணத்தில் நடைப்பெற்றது.

தமிழக அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன், மூர்த்தி, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சுரேஷ்குமார், புதுக்கோட்டை கலெக்டர் கவிதா ராமு, தொழிலதிபர் சேகர் ரெட்டி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் கே.கே. செல்லபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் விஜயபாஸ்கர், திண்டுக்கல் சீனிவாசன், முத்துராஜா, சின்னத்துரை, திருவையாறு சந்திரசேகரன், பேராவூரணி அசோகன், முன்னாள் எம்பி எஸ்.எஸ். பழனிமாணிக்கம், முன்னாள் எம்எல்ஏக்கள் கதிரவன், ராமசுப்புராம், நடிகர் கருணாஸ், கார்த்திக் தொண்டைமான், அரசியல் கட்சி பிரமுகர்கள் சசிகலாவின் சகோதரர் மன்னார்குடி திவாகரன், எச். ராஜா, ராஜே ராஜசேகரன், திருச்சி முன்னாள் மேயர் சாருபாலா தொண்டைமான், சேர்மன்கள் திலகவதி செந்தில், மாலா ராஜேந்திரன், வள்ளியம்மை தங்கமணி, தொழிலதிபர்கள் திண்டுக்கல் ரத்தினம், கரிகாலன், நத்தம் கண்ணன், விஜய ரவி பல்லவராயர், பண்ண வயல் ராஜா தம்பி பாஸ்கர், பேராசிரியர் தங்க ரவிசங்கர், பேக்கரி மகராஜ் அருண் சின்னப்பா, கடம்பூர் ராஜா, சென்னை பாலாஜி, அந்தோணி திண்டுக்கல் ஜெகன், உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் அரசு அதிகாரிகள், கல்வியாளர்கள், கவிஞர்கள், புதுகை வரலாறு நிறுவனர் சிவசக்திவேல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மையாருக்கு அஞ்சலி செலுத்தினர்.



# இன்று

13-5-2023

முட்டைகோஸ் சாறு தடவினால் முகச்சுருக்கம் மறையும்
சக வருடம் 1945 வைகாசம் 23

| சோபகிருது சித்திரை 30 | MAY - SAT சனி | ஷவ்வால் 22 தேய்பிறை 133/232 | இராசிபலன் |
|---|---|---|---|

தேய். அஷ்டமி 06.09 (கா. 08.22) அவிட்டம் 17.46 (மா. 01.00) நியாஜ் 34.40 அகஸ் 31.06 சித்த 17.46 மேல் அமிர்த. காரைக்குடி ஸ்ரீகொப்புடைய நாயகி வெள்ளி கேடயத்தில் பவனி. வீரபாண்டி ஸ்ரீகௌமாரியம்மன் தெற்கு ரத வீதியில் தேரோட்டம். திருநள்ளாறு சனி பகவான் சிறப்பு அபிஷேகம்.

| நல்லநேரம் | கௌ.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 7.30-8.30 | 10.30-11.30 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை: 4.30-5.30 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம்: கிழக்கு. பரிகாரம்: தயிர். சந்திராஷ்டமம்: பூசம் ஆயில்யம். கரணம்: 12-1.30. சூரிய உதயம்: 5.54

மேஷம் - வெற்றி, ரிஷபம் - லாபம், மிதுனம் - பயம், கடகம் - ஆக்கம், சிம்மம் - வரவு, கன்னி - தாமதம், துலாம் - எதிர்ப்பு, விருச்சி - மதிப்பு, தனுசு - பக்தி, மகரம் - வெற்றி, கும்பம் - உதவி, மீனம் - ஓய்வு

ஆனைக்கும் அடி சறுக்கும்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

கட்டளையிட விரும்புபவன் முதலில் பணிவதற்கு கற்றுக்கொள்ள வேண்டும்





| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.5,717 | Rs. 6,190 |


# கொளத்தூர் கிராமத்தில் ஜல்லிக்கட்டு போட்டி அமைச்சர் எஸ். எஸ் சிவசங்கர் தொடங்கி வைத்தார்



அரியலூர், மே.13-

கொளத்தூர் கிராமத்தில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியை, அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, ஆலத்தூர் ஒன்றியம், கொளத்தூர் ஊராட்சியில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியினை, தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர், கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் கற்பகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், ஆலத்தூர் யூனியன் சேர்மன் என். கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

கொளத்தூர் கிராமத்தை சேர்ந்த டி. ஆர். சிவசங்கர் தலைமையிலான ஜல்லிக்கட்டு விழா குழுவினர், முன் நின்று நடத்திய இந்த ஜல்லிக்கட்டு போட்டியில், பெரம்பலூர், அரியலூர், திருச்சி, தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த, 400க்கும் மேற்பட்ட ஜல்லிக்கட்டு காளைகள் பங்கேற்றன, போட்டியில் 150க்கும் மேற்பட்ட ஜல்லிக்கட்டு வீரர்கள் பங்கேற்றனர், ஜல்லிக்கட்டு போட்டியில் காளைகளை அடக்கிய வீரர்களுக்கும், அவர்களுக்கு கட்டுப்படாமல் ஓடிய காளைகளின் உரிமையாளர்களுக்கும், தங்கக்காசு, வெள்ளிக்காசு, சைக்கிள் சில்வர் பாத்திரங்கள், ரொக்க பணம் உள்ளிட்டவை, பரிசு பொருட்களாக வழங்கப்பட்டன.

திமுக மாவட்ட துணைச் செயலாளர் டி. சி. பாஸ்கர் மற்றும் பல்வேறு துறைகளின் அரசு அலுவலர்கள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உள்ளிட்ட பலரும், கொளத்தூர் கிராமத்தில், அரசு விதிமுறைகளின்படி நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டிகளை கண்டு களித்தனர். பெரம்பலூர் மாவட்ட போலீசார், பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

# ட்விட்டர் நிறுவனத்திற்கு புதிய சிஇஓ எலான் மஸ்க் அறிவிப்பு

சான் பிரான்சிஸ்கோ, மே.13-

வெகு விரைவில் ட்விட்டர் நிறுவனத்தை புதிய தலைமை நிர்வாக அலுவலர் (சிஇஓ) நிர்வகிப்பார் என எலான் மஸ்க் தெரிவித்துள்ளார். தான் அந்த பதவியில் இருந்து விலக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதனை ட்வீட் மூலம் உலகத்துடன் பகிர்ந்துள்ளார் மஸ்க்.

கடந்த ஆண்டு ட்விட்டர் நிறுவனத்தை வாங்கி இருந்தார் மஸ்க். பயனர்கள் தங்களது கருத்துகளை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் இந்த தளத்தில் பல்வேறு அதிரடி மாற்றங்களை அவர் செய்தார். பயனர்களுக்கு சந்தா கட்டணம் தொடங்கி ஊழியர்களை பணியில் இருந்து நீக்கியது என அவரது நடவடிக்கைகள் நீண்டன.



இந்நிலையில், ட்விட்டருக்கு புதிய சிஇஓ-வை அவர் நியமித்துள்ளார். இது குறித்த தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ள அவர், "ட்விட்டருக்கு புதிய தலைமை நிர்வாக அதிகாரியை நான் நியமித்துள்ளேன் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி. அவர் தனது பணியை 6 வாரங்களில் தொடங்க உள்ளார். அதன் பிறகு எனது பணி ட்விட்டர் நிறுவனத்தின் நிர்வாக தலைமை மற்றும் சிடிஓ என இருக்கும். மென்பொருள் மற்றும் புராடக்ட் சார்ந்த பணிகளை மேற்பார்வையிடுவேன்" என மஸ்க் தெரிவித்துள்ளார்.

புதிய சிஇஓ யார் என்பதை மஸ்க் அறிவிக்கவில்லை. ஆனால், அவர் பெண் என்பது அவரது ட்வீட் மூலம் உறுதியாகி உள்ளது. கடந்த 2006-ல் ட்விட்டர் நிறுவனம் நிறுவப்பட்டது. அது முதல் இதுவரை சிஇஓ பணியை ஆண்கள் மட்டுமே கவனித்து வந்துள்ளனர். ஜாக் டோர்ஸி, இவான் வில்லியம்ஸ், டிக் காஸ்டோலோ, பராக் அகர்வால், எலான் மஸ்க் ஆகியோரை தொடர்ந்து ட்விட்டர் நிறுவனத்தை புதிய சிஇஓ நிர்வகிக்க உள்ளார். ட்விட்டரின் புதிய சிஇஓ-வாக லிண்டா யாக்கரினோ செயல்பட உள்ளதாக தகவல்கள் வெளிவருகின்றன. இருந்தாலும் அவர் யார் என்பது இப்போதைக்கு மஸ்க் மட்டுமே அறிவார்.






# ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் அறநிலையத்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 14 புதிய வாகனங்கள் அமைச்சர் சேகர்பாபு வழங்கினார்

சென்னை, மே.13-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நுங்கம்பாக்கம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் நேற்று ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் அலுவலர்களின் பயன்பாட்டிற்காக கொள்முதல் செய்யப்பட்ட 14 புதிய வாகனங்களை வழங்கிடும் விதமாக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறையின் 2021-22 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், "துறை அலுவலர்கள் பயன்பாட்டிற்கு 108 புதிய ஊர்திகள் ரூ.8 கோடி செலவில் கொள்முதல் செய்யப்படும்" என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டடங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், திருக்கோயில்களுக்கு சொந்தமான அசையா சொத்துகளைக் கண்டறிந்து அளவீடு செய்தல், திருக்கோயில்களின் திருப்பணிகளை பார்வையிட்டு விரைந்து பணிகளை முடிக்க செய்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கு வாகன வசதிகள் ஏற்படுத்தித் தரும் வகையில், புதிய வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 04.04.2022 அன்று முதற்கட்டமாக ரூ.5.08 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 69 புதிய வாகனங்களையும், 17.12.2022 அன்று இரண்டாம் கட்டமாக ரூ.1.56 கோடி செலவிலான 19 புதிய வாகனங்களையும் அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கினார். அதன் தொடர்ச்சியாக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று ரூ.1.13 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 14 புதிய வாகனங்களை இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் விதமாக வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

## தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவரிடம்

# திரிகூடபுரம் ஒன்றிய கவுன்சிலர் அருணாசல பாண்டியன் கோரிக்கை மனு



தென்காசி,மே.13-

தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் திரிகூடபுரம் ஒன்றிய கவுன்சிலர் அருணாசல பாண்டியன் மாவட்ட ஆட்சித் தலைவர் துரை. ரவிச்சந்திரனிடம் தனது தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் ஆற்று பாலம் அமைத்து தர வேண்டி கோரிக்கை மனு அளித்தார், கடையநல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட திரிகூடபுரத்தில் இருந்து சுமார் 6கிலோமீட்டர் தொலைவிலுள்ள பிரசித்திபெற்ற அருள்மிகு பெரியசாமி அய்யனார் திருக்கோவிலுக்கு செல்லும் வழியில் பெரிய ஆறு உள்ளது, ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு துறை அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற குழு மதிப்பீட்டு குழு தலைவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கு முன்னர் பணியாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகாஷ், நபார்டு வங்கியின் மூலம் பாலம் கட்ட உறுதியளித்து மண் பரிசோதனை நடைபெற்றது, திட்ட மதிப்பீடும் செய்யப்பட்டது மேலும் மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் அமைந்துள்ளதால் மழை பெய்து திடீரென்று வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது, இதனால் பெரியசாமி கோவிலுக்கு வரும் பக்தர்களும், விவசாய வேலைக்கு செல்லும் கூலி ஆட்களின் நலன் கருதி விரைந்து இந்த ஆற்றுப்பாலத்தை அமைத்து தர வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கடையநல்லூர் ஒன்றிய குழுத் தலைவர் சுப்பம்மாள் பால்ராஜ், போகநல்லூர் ஒன்றிய கவுன்சிலர் சித்ரா கண்ணன் ஆகியோர் உடன் சென்றனர்.

# தென்காசியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பிறந்தநாள் விழா

தென்காசி, மே.13-

அதிமுக பொதுச்செயலாளரும் முன்னாள் தமிழக முதலமைச்சருமான எடப்பாடி பழனிச்சாமியின் பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி நகர அதிமுக சார்பில் தென்காசி தெற்கு மாவட்ட அதிமுக செயலாளர் செல்வ மோகன்தாஸ் பாண்டியன் தலைமையில் தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதர் ஆலயத்தில் சிறப்பு பூஜை நடத்தப்பட்டு அதன் பிறகு அம்மன் சன்னதியில் பட்டாசு வெடித்தும், கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.



இந்நிகழ்ச்சியில் தென்காசி நகரச் செயலாளர் வி. சுடலை, அதிமுக அமைப்பு செயலாளர் பி.ஜி. ராஜேந்திரன், முன்னாள் எம்.பி பிரபாகரன், பொதுக்குழு உறுப்பினர் கசமுத்து, மாவட்ட எம். ஜி.ஆர் மன்றம் மாரிமுத்து, சிவசீத்தாராமன், வர்த்தக அணி முருகன் ராஜ், இலக்கிய அணி காதர், மாவட்ட தொழிற்சங்க அணி சுப்புராஜ், முத்துக்குமாரசாமி, சுமதி, மைமூன் பீவி, பாலமுருகன் சிந்தாமணி காமராஜ், குணசேகரன், கருப்பசாமி, ஆசாத் நகர் ராஜா, தகவல் தொழில்நுட்ப அணி சங்கர், வார்டு செயலாளர்கள் அகமதுஷா, ராமசாமி, சுடலைமணி, செல்வராஜ், மாரியப்பன், காதர் மைதீன், தமிழ்செல்வம், காஜா மைதீன், பங்காரு, மனோகர், கனகசபாபதி, கல்யாண குமார், செய்யதுஅலி பாதுஷா, ராமதாஸ், மகேஸ்வரன், சக்தி மணிகண்டன், அருணாசலம், பூக்கடை துரை, வைரமுத்து, அழகிரி, சந்தோஷ், ஜயப்பன், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டையில் மே.31 ம் தேதி வரை

# அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளிகளிலும் உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சியினை நடத்த வேண்டும்

## தலைமை முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா அறிவுறுத்தல்



புதுக்கோட்டை, மே.13-

புதுக்கோட்டை முதன்மைக் கல்வி அலுவலகம் அருகில் உள்ள தேர்வுக்கூட அரங்கில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கான மீளாய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா தலைமை தாங்கி கூட்டத்தினை தொடங்கி வைத்தார், மேலும் இக்கூட்டத்தில் பன்னி ரெண்டாம் வகுப்பு அரசுப்பொதுத்தேர்வில் பள்ளியின் தேர்ச்சி சதவீதம் குறித்து முதன்மைக்கல்வி அலுவலர் மீளாய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து 31-05-2023 இல் பணி ஓய்வு பெறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கும், பன்னிரெண்டாம் வகுப்பு அரசுப்பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற வைத்த தலைமையாசிரியர்களுக்கும் முதன்மைக்கல்வி அலுவலர் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் 31-05-2023 இல் பணி ஓய்வு பெறும் தலைமை யாசிரியர்கள் ஏற்புரை ஆற்றினார்கள், இக்கூட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டக்கல்வி ஆ.ரமேஷ், அறந்தாங்கி மாவட்டக்கல்வி அலுவலர் (பொ) ரெ.முருகேசன், தேர்வுத்துறை உதவி இயக்குநர் தமிழரசன், முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் (மேல்நிலை) ஜீவானந்தம், (உயர்நிலை) ராஜு, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் உதவித்திட்ட அலுவலர்கள் சுதந்திரன், தங்கமணி, மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் தங்கராஜ், சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை. செந்தில், பள்ளித்துணை ஆய்வாளர்கள் கி.வேலுச்சாமி, குரு. மாரிமுத்து, இளையராஜா, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், தலைமையாசிரியர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# தமிழக அரசியலில் தலையிடுவதை தமிழிசை நிறுத்திக் கொள்ள வேண்டும்: புதுச்சேரி திமுக வலியுறுத்தல்

புதுச்சேரி, மே.13-

தமிழக அரசியலில் தலையிடுவதையும் திமுக மூத்த அமைச்சர் குறித்து விமர்சிப்பதையும் துணைநிலை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று புதுச்சேரி திமுக அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளரும், எதிர்கட்சித் தலைவருமான சிவா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "புதுச்சேரி மாநிலத்தின் பகுதி நேர ஆளுநரான தமிழிசை சவுந்தரராஜன், தெலங்கானா, புதுச்சேரியைத் தொடர்ந்து தமிழகத்தையும் ஆள வேண்டும் என்ற ஆசையால் அடிக்கடி தமிழக அரசியலில் மூக்கை நுழைக்கிறார். தமிழகத்தைப் பற்றி நான்



பேசுவதை யாரும் தடுக்க முடியாது என்று சவால் விடுகிறார்.

தமிழகத்தில் இருந்து நாகாலாந்து ஆளுநராக இருக்கும் இல.கணேசன் மற்றும் ஜார்கண்ட் ஆளுநராக இருக்கும் சி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோர் இப்படியா அடிக்கடி பேசுகிறார்கள். அவர்களுக்கு இல்லாத தமிழக பாசமா தமிழிசைக்கு உண்டு. தேர்தலில் ஒரு முறை கூட வெற்றி பெற இயலாத தமிழிசை, திமுக பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகனுக்கு சவால் விடுவதை ஏற்க முடியாது.

தமிழக ஆளுநருக்கு அறிவுரை சொல்ல அவருக்கு தகுதியில்லை என்று இவர் வக்காலத்து வாங்குகிறார். தமிழக ஆளுநர் அரசியல் சட்டப்படி முறையாக செயல்பட்டால் அவருக்கு ஏன் அமைச்சர் துரைமுருகன் அறிவுரை வழங்கப்போகிறார். மாநில அமைச்சரவையின் ஆலோசனைப்படி தான் ஆளுநர்கள் செயல்பட வேண்டும் என்றும், ஆளுநருக்கு தனியாக அதிகாரமில்லை என்றும் உச்சநீதிமன்றமே பலமுறை குட்டுவைத்தும், தமிழக மற்றும் புதுச்சேரி ஆளுநர்களுக்கு உரைக்கவில்லை என்றால் என்ன செய்வது.

ஒரு மாநிலத்தின் ஆளுநர் எப்பவர் கட்சிக்கு அப்பாற்பட்டு செயல்பட வேண்டும். திமுக எதிர்க்கட்சியாக இருந்தபொழுது ஆளுநரை ஏன் சந்திக்க வேண்டும் என்கிறார். ஆளுநர் பதவி கூடாது என்பது அண்ணா காலத்தில் இருந்து இன்றுவரை திமுகவின் கொள்கையாகும். அதனால் தான் தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் பதவியே கூடாது என்று தீர்மானம் இயற்றி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அந்த வகையில் புதுச்சேரி அரசு மக்களின் விருப்பத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் அறிவிப்பு செய்துள்ள பல திட்டங்கள் முடங்கிக் கிடக்கின்றன. ஒரு நிர்வாகியாக அதை செயல்படுத்துங்கள். "பெஸ்ட்" புதுச்சேரி என்றீர்களே. அதை உருவாக்க உழையுங்கள். மத்திய அரசின் மாநிலத்துக்கு பெறவேண்டியநிதியைபெற்று வாருங்கள். இதையெல்லாம் விட்டுவிட்டு மூன்றாவதாக இன்னொரு மாநிலத்தை ஆள ஆசைப்படுவதையும், எங்கள் கட்சி மூத்த அமைச்சர் பற்றி விமர்சனம் செய்வதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

# கந்தர்வகோட்டை அருகே காட்டுநாவல் ஊராட்சியில் அறிவியல் திருவிழா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பார்வையிட்டு பாராட்டு

கந்தர்வகோட்டை, மே.13-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் காட்டுநாவல் ஊராட்சியில் நடைபெற்ற ஆயிரம் அறிவியல் திருவிழாவை ஊராட்சி மன்றத் தலைவர் ஆரஞ்சு பாப்பா தொடங்கி வைத்தார்.



பள்ளி மேலாண்மை குழுத் தலைவி லட்சுமி, வார்டு உறுப்பினர் பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வள மைய மேற்பார்வையாளர் பிரகாஷ் அனைவரையும் வரவேற்றார்.

ஆயிரம் ஆயிரம் அறிவியல் திருவிழாவை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வீரப்பன் பார்வையிட்டு ஆலோசனை வழங்கி பேசும்போது மாணவர்கள் கோடை காலத்தில் ஆயிரம் ஆயிரம் திருவிழாவை சிறப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அறிவியல் என்பது ஏன்? எதற்கு? எப்படி என்ற வினாக்கள் மூலம் அறிவியல் மனப்பான்மையை வளர்க்கக்கூடிய வாய்ப்புகளை வானவில் மன்றம் மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. மாணவர்கள் கோடைகாலத்தில் உள்ள விடுமுறை நாட்களில் உங்கள் ஊரில் உள்ள நூலகங்களுக்கு சென்று புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்று பேசினார், இல்லம் தேடிக் கல்வி மைய ஒருங்கிணைப்பாளர் ரகமத்துல்லா ஒருங்கிணைத்தார்.

வானவில் மன்ற கருத்தாளர்கள் வசந்தி, தெய்வீக செல்வி ஆகியோர் மாணவர்களுக்கு எளிய அறிவியல் சோதனை நிகழ்வுகளை மாணவர்களுக்கு செய்து காண்பித்திருந்தனர், இந்நிகழ்வுகளை தன்னார்வலர்கள் சரண்யா, சுமதி ஆகியோர் ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

ஊர் பொதுமக்கள் சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ராகுலுக்கு தண்டனை வழங்கிய நீதிபதி உள்ளிட்ட 68 நீதிபதிகளின் பதவி உயர்வு நிறுத்திவைப்பு



புதுடெல்லி, மே, 13 –

ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்த நீதிபதி உள்பட 68 கீழமை நீதிமன்ற நீதிபதிகளின் பதவி உயர்வை உச்ச நீதிமன்றம் நிறுத்திவைத்துள்ளது.

குஜராத்தைச் சேர்ந்த கீழமை நீதிபதிகள் 68 பேருக்கு பதவி உயர்வு வழங்க அம்மாநில உயர் நீதிமன்றம் அளித்த பரிந்துரையை ஏற்று அம்மாநில அரசு அவர்களை மாவட்ட நீதிபதிகளாக உயர்த்தியது. இதை எதிர்த்து ரவிகுமார் மஹெதா, சச்சின் பிரதாப் ராய் மேதா ஆகிய இரு மூத்த சிவில் நீதிபதிகள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கை எம்.ஆர். ஷா தலைமையிலான அமர்வு விசாரித்து நேற்று தீர்ப்பளித்தது.

அதில், "உயர் நீதிமன்றம் அளித்த பரிந்துரையை ஏற்று 68 பேரை மாவட்ட நீதிபதிகளாக உயர்த்திய மாநில அரசின் உத்தரவு சட்டவிரோதமானது. எனவே, இந்த உத்தரவுக்கு இடைக்கால தடை விதிக்கப்படுகிறது. மாவட்ட நீதிபதிகளாக பதவி உயர்வு பெற்ற 68 பேரும், தாங்கள் முன்பு வகித்த பதவிக்கே திரும்பச் செல்ல வேண்டும். இந்த வழக்கு பொருத்தமான அமர்வுக்கு மாற்றப்படும்" என நீதிபதி எம்.ஆர். ஷா தலைமையிலான அமர்வு தெரிவித்துள்ளது.

நீதிபதி எம்.ஆர். ஷா, வரும் 15 ஆம் தேதி நாளை மறுநாள் ஓய்வு பெற உள்ளதால் இந்த வழக்கு வேறு அமர்வுக்கு மாற்றப்பட இருக்கிறது. பதவி உயர்வு அளிக்கப்பட்ட 68 நீதிபதிகளில் ராகுல் காந்திக்கு 2 ஆண்டு காலம் சிறை தண்டனை விதித்த நீதிபதியான ஹரிஷ் ஹஸ்முக்பாய் வர்மாவின் பெயரும் அடக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.



அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிறந்தநாளை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் விராலிமலை சட்டமன்ற உறுப்பினர் விஜயபாஸ்கர் ஆணைக்கிணங்க புதுக்கோட்டை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் அண்ணாதுரை ஏற்பாட்டில் பெருங்களூர் பிடாரி அம்மன் கோயிலில் சிறப்பு அர்ச்சனை செய்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.



தமிழ்ப்புலிகள் கட்சியின் ஈரோடு மத்திய மாவட்ட இளம்புலிகள் அணி செயலாளராக நியமனம் செய்த கட்சியின் தலைவர் நாகை திருவள்ளுவனுக்கும், மாநில நிர்வாகிகளுக்கும், நியமனம் செய்ய பரிந்துரைத்த மாவட்ட செயலாளர் இரா.சிந்தனைச் செல்வனுக்கும், மாநில, மாவட்ட நிர்வாகிகள் அனைவருக்கும் செ.பூபதிவள்ளுவன் நன்றி தெரிவித்தார்.

# தமிழ் பாரம்பரிய தற்காப்பு கலை பயிற்சி பெற்ற 55 மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கும் விழா



தாம்பரம், மே, 13 –

கீரப்பாக்கம் ஊராட்சியில் தமிழ் பாரம்பரிய தற்காப்பு கலை பயிற்சி பெற்ற 55 மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட வண்டலூர் அடுத்த கீரப்பாக்கம் ஊராட்சியில் தமிழ் பாரம்பரிய தற்காப்பு கலை, கல்வி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் கீரப்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட விநாயகபுரம் பகுதியில் சிலம்பம், கராத்தே, யோகா, குத்துவரிசை, களரி உள்ளிட்ட இலவச கோடைக்கால சிறப்பு பயிற்சி முகாம் கடந்த ஒரு வாரமாக நடைபெற்று வந்தது.

இதில் பயிற்சி பெற்ற 55 அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கும் விழா அங்கன்வாடி மையம் வளாகத்தில் நடைபெற்றது. இதில் தமிழ் பாரம்பரிய தற்காப்பு கலை கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் மரு. நா.ரமேஷ் ஆசான் தலைமை தாங்கினார். பயிற்சி ஆசிரியர்கள் பூ. வெங்கடேசன், மா.கன்னியப்பன், ஞா.பவித்ரா ஞா.சங்கீதா, த.தனலட்சுமி, ஞா.நிவேதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக 4-வது வார்டு உறுப்பினர் சசிகலா தனசேகரன் கலந்துகொண்டு இலவச கோடைகால சிறப்பு பயிற்சி முகாமில் பயிற்சி பெற்ற 55 மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

# மின்சாரம் தாக்கி உயிரிழந்த மின்சார ஒப்பந்த ஊழியர் குடும்பத்திற்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது



சீர்காழி, மே, 13 –

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே திருக்கருக்காவூர் ஊராட்சிக்குட்பட்ட கீழாநல்லூர் கிராமம் மேலத்தெருவை சேர்ந்த ரமேஷ் மகன் ஆனந்தராஜ் (வயது 22 ). இவர் தமிழ்நாடு மின்சார வாரிய துறையில் ஒப்பந்த பணியாளராக பணிபுரிந்து வந்தார்.


கடந்த 6 ஆம் தேதி பழைய சுனாமி குடியிருப்பு அருகில் புதிய மின்மாற்றி அமைக்கும் பணியில் ஈடுபட்டபோது எதிர்பாராமல் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இந்நிலையில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் உரிய நிவாரணம் வழங்க கோரி கடந்த 7 ஆம் தேதி சீர்காழியில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்த அமைச்சர் மெய்யநாதன், பன்னீர்செல்வம் எம்எல்ஏ, உதவி கலெக்டர் அர்ச்சனா, தாசில்தார் செந்தில்குமார், தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர் லதா மகேஸ்வரி ஆகியோர் தலைமையில் சமாதான கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உரிய நிவாரணம் விரைவில் வழங்கப்படும்எனதெரிவித்ததன் பேரில் போராட்டக்காரர்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றனர். இந்நிலையில் நேற்று சீர்காழி சட்டமன்ற அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அரசு மற்றும் ஒப்பந்ததாரர் சார்பில் நிவாரண உதவி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பன்னீர்செல்வம் எம்எல்ஏ தலைமை தாங்கி பாதிக்கப்பட்ட ஆனந்தராஜ் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு மின்சார வாரிய துறை சார்பில் இழப்பீட்டுத் தொகையாக ரூ.5 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார். மேலும் ஒப்பந்தக்காரர் சார்பில் ரூ.2 லட்சத்து 50 ஆயிரம் பணத்தையும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு வழங்கினர்.

அப்பொழுது தமிழ்நாடு மின்சார வாரிய மாவட்ட மேற்பார்வையாளர் சசிதரன், செயற்பொறியாளர் லதாமகேஸ்வரி, உதவி செயற்பொறியாளர் விஸ்வநாதன், ஒப்பந்தக்காரர் பார்த்திபன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கொள்ளிடம் ஒன்றிய செயலாளர் கேசவன், திமுக நிர்வாகி ராஜ்குமார் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# 7 வயது சிறுமிக்கு பாலியல் சீண்டல் செய்த காவலாளியை போலீசார் கைது செய்தனர்



திருவொற்றியூர், மே, 13 –

சென்னை, திருவொற்றியூர், கன்னியப்பா கிராமணி தெருவை சேர்ந்த 7 வயது சிறுமி தனியார் பள்ளியில் இரண்டாம் வகுப்பு படித்து வருகிறார். தனது வீட்டின் அருகே உள்ள பால்ராஜ் என்பவரின் கட்டிடத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியை அங்கு பணிபுரியும் காவலாளி மகேந்திரன் தூக்கிச் சென்று பாலியல் சீண்டலில் ஈடுபட்டுள்ளார்.

இதுகுறித்து சிறுமியின் தாய் திருவொற்றியூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் பெண் காவல் ஆய்வாளர் ஷிலா மேரி வழக்கு பதிவு செய்து மகேந்திரனை கைது செய்து, விசாரணை மேற்கொண்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# மீன் பண்ணை அமைக்க மானியம் வழங்க லஞ்சம் கேட்ட ஆய்வாளர் லஞ்ச ஒழிப்பு துறை போலிசாரால் கைது



ஈரோடு, மே, 13 –

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள பி.மேட்டுப்பாளையத்தை சேர்ந்தவர் கார்த்திக் (வயது 43). விவசாயி. இவருக்கு சொந்தமான விவசாய நிலம் கோபி அருகே செரையாம்பாளையம் பவானி ஆற்றங்கரை பகுதியில் உள்ளது.

இந்த நிலத்தில் ரூ.7 லட்சம் மதிப்பில் மீன் பண்ணை அமைத்துள்ளார். இவருக்கு மீன் பண்ணை அமைப்பதற்கு தமிழக அரசு சார்பில் ரூ.2 லட்சத்து 80 ஆயிரம் மானியம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி முதல் கட்டமாக கடந்த 2 மாதத்துக்கு முன்பு கார்த்திக்குக்கு ரூ.1 லட்சத்து 60 ஆயிரம் மானிய தொகை அவரது வங்கி கணக்குக்கு மீன் வளத்துறை சார்பில் செலுத்தப்பட்டது.

இந்த நிலையில் கோபிசெட்டிபாளையம் மீன் வளத்துறையில் ஆய்வாளராக பணியாற்றி வரும் பவானிசாகரை சேர்ந்த அருள்ராஜ் (47) என்பவர் கார்த்திக்கை தொடர்பு கொண்டு உங்களுக்கு 2-ம் கட்ட மானியமாக ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் வந்துள்ளது. அந்த மானியத்தொகை 2 நாட்களுக்குள் உங்களுக்கு வழங்கப்படும். எனவே மானியத் தொகை வழங்க எனக்கு ரூ.31 ஆயிரம் லஞ்சமாக வழங்க வேண்டும் என கார்த்திக்கிடம் அருள்ராஜ் கேட்டதாக கூறப்படுகிறது.

ஆனால் லஞ்சம் கொடுக்க விரும்பாத கார்த்திக் இது குறித்து ஈரோடு மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் அளித்தார். இதைத் தொடர்ந்து ரசாயன பவுடர் தடவிய ரூபாய் நோட்டுகளை லஞ்ச ஒழிப்பு போலீசார் கார்த்திக்கிடம் வழங்கினர். இதையடுத்து மீன்வளத்துறை ஆய்வாளர் அருள்ராஜை கார்த்திக் தொடர்பு கொண்டார். அப்போது அவர் லஞ்ச பணத்துடன் ஒடத்துறை குளம் பகுதிக்கு வருமாறு கார்த்திக்கிடம் கூறினார். இதை தொடர்ந்து கார்த்திக்கும் பணத்துடன் ஒடத்துறை பகுதிக்கு சென்றார்.

அந்த பகுதியில் ஏற்கனவே லஞ்ச ஒழிப்பு போலீஸ் துணை சூப்பிரண்டு ராஜேஸ் தலைமையில், இன்ஸ்பெக்டர் ஆறுமுகம், சப்-இன்ஸ்பெக்டர் முருகன் மற்றும் போலீசார் மறைந்து இருந்தனர். அப்போது கார்த்திக் தான் கொண்டு வந்த பணத்தை அருள்ராஜிடம் கொடுத்தார். அப்போது அங்கு மறைந்து இருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் அருள்ராஜை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர்.

இதை தொடர்ந்து போலீசார் கைது செய்யப்பட்ட அருள்ராஜை கோபியில் உள்ள மீன் வளத்துறை அலுவலகத்துக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தினர். இதையடுத்து கைது செய்யப்பட்ட அருள்ராஜை போலீசார் சிறையில் அடைத்தனர்.

# சுருக்கெழுத்து தேர்வில் வெற்றி பெற்று அரசு பணியில் சேருபவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் பாராட்டு



காரைக்கால், மே, 13 –

புதுவை அரசு சார்பில் 33 இடங்களுக்கு சுருக்கெழுத்து தேர்வு நடைபெற்றது. புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த சுமார் 500-க்கும் மேற்பட்டவர்கள் இத்தேர்வில் கலந்து கொண்டார்கள்.

இவர்களில் காரைக்காலைச் சேர்ந்த 20 பேர் தேர்வு எழுதிய நிலையில் இவர்களில் ஒன்பது பேர் ஆட்சியரின் உதவியாளராக உள்ள ஜெயசீலனிடம் இலவசமாக பயிற்சி பெற்றவர்கள். இவர்களில் ஆறு பேர் இத்தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். இவர்கள் மரியாதை நிமித்தமாக ஆட்சியரை சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்.

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் தனது உதவியாளர் ஜெயசீலனையும் பாராட்டினார். மாணவர்களிடம் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் இலவசமாக பயிற்சி அளித்த ஜெயசீலன் மற்றும் நீதித்துறையை சேர்ந்த சிங்காரவேலு ஆகியோரை ஆட்சியர் வெகுவாக பாராட்டினார். தேர்வானவர்களில் இருவர் புதுவை மாநிலத்திலே முதல் மற்றும் மூன்றாம் இடத்தை பிடித்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் துணை ஆட்சியர் (பேரிடர் மேலாண்மை) எஸ். பாஸ்கரன், ஆட்சியரின் செயலர் பாலு என்கிற பக்கிரிசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

சீர்காழி விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சையில் உள்ள

# 20 பேரை மாவட்ட ஆட்சியர், எம்.பி, எம்.எல்.ஏக்கள் சந்தித்து ஆறுதல் கூறினர்





சீர்காழி, மே, 13 –

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் நடைபெற்ற கோர விபத்தில் படுகாயமடைந்து சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 20 நபர்களை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி, எம்.பி, இராமலிங்கம், எம்எல்ஏ க்கள் நிவேதா முருகன், பன்னீர்செல்வம் ஆகியோர் சந்தித்து ஆறுதல் கூறினர்.

சம்பவ இடத்தையும் பார்வையிட்டு விசாரணை செய்தனர். காயம் அடைந்தவர்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல வாகன ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்தனர்.

இதையடுத்து விபத்தை ஏற்படுத்திய பேருந்து மற்றும்லாரி ஓட்டுநர்களை சீர்காழி போலீசார் கைது செய்தனர். ஆர்டிஓ அர்ச்சனா, தாசில்தார் செந்தில்குமார், மற்றும் திமுக மாநில செயற்குழு உறுப்பினர் முத்து மகேந்திரன், மாவட்ட கவுன்சிலர் விஜயேஸ்வரன், ஒன்றிய செயலாளர் ஏ.ஜி. ஜே.பிரபாகர், பஞ்சு குமார், கொள்ளிடம் ஒன்றிய சேர்மன் ஜெயப்பிரகாஷ், நகர செயலாளர் சுப்பராயன், சீர்காழி டி.எஸ்.பி. லாமேக், காவல் ஆய்வாளர் சிவகுமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# சாலையோரம் நடந்து சென்றவர் மீது சரக்கு லாரி மோதியதில் ஒருவர் மரணம்: உடலை எடுக்க விடாமல் பொதுமக்கள் போராட்டம்



திருவொற்றியூர், மே, 13 –

சென்னை, நொச்சிக்குப்பம் பகுதியைச் சேர்ந்தவர் அருள்தாஸ் (வயது 45). மவுண்டில் உள்ள மிலிட்டரி கேம்பஸ் அலுவலக உதவியாளராக பணியாற்றி வருகிறார். எண்ணூர் தாழங்குப்பத்தில் அருள்தாஸின் தங்கை ஜெயா வசித்து வருகிறார். இவரைப் பார்க்க அருள்தாஸ் நேற்று முன்தினம் வந்துள்ளார்.

நேற்று விடியற்காலை தாழங்குப்பம் சாலை ஓரத்தில் நடந்து சென்று கொண்டு இருந்தார் அருள்தாஸ். அப்பொழுது முகத்துவார ஆற்று மேம்பாலம் வழியாக தாழங்குப்பம் நோக்கி வந்த லாரி ஒன்று அருள் தாஸ் மீது மோதியது. இதில் அவர் அதே இடத்தில் உடல் நசுங்கி உயிரிழந்தார்.

அருள்தாஸ் விபத்தில் இறந்த சம்பவம் கேள்விப்பட்ட அவரது உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் விபத்து நடந்த இடத்தில் ஒன்று கூடினர். இந்த வழியாக கனரக வாகனங்கள் செல்ல தடை விதிக்க வேண்டும் என்று பலமுறை கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எடுக்காததால் இப்பகுதியில் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. எனவே கனரக வாகனங்கள் இந்த வழியாக செல்ல தடை விதிக்க வேண்டும் என்று கூறி விபத்தில் சிக்கிய அருள்தாசன் உடலை எடுக்க விடாமல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து தகவல் அறிந்த போலீசார் எண்ணூர் உதவி ஆணையர் பரமானந்தம் தலைமையில், சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக சமாதானம் செய்தனர். இதை தொடர்ந்து போராட்டத்தை கைவிட்டு அனைவரும் கலைந்து சென்றனர்.

பின்னர் மாதவரம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து அருள்தாஸ் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். லாரி ஓட்டுநர் லாரியை அங்கேயே விட்டுவிட்டு அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். அவரை போலீசார் தேடி வருகின்றனர்.

# சர்வதேச செவிலியர்கள் தின விழா மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் பங்கேற்பு



காரைக்கால், மே, 13 –


பிலாரன்ஸ் நைட்டிங்கேள் பிறந்த தினத்தை முன்னிட்டு சர்வதேச செவிலியர் தின விழா அரசுபொதுமருத்துவமனையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்விற்கு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையேற்று விழாவில் கலந்து கொண்டார்.

முன்னதாக செவிலியர்கள் அனைவரும் மெழுகுவர்த்தி ஏந்தி உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். மேலும் சிறந்த செவிலியரான இவருடைய சேவையை பாராட்டும் விதமாக, பெற்றோர் ஆசிரியர் சங்கம் சார்பில் கண்ணம்மாள் என்பவருக்கு சிறந்த செவிலியருக்கான விருதை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். மேலும் நான்கு செவிலியர்களுக்கும் அரசு பொது மருத்துவ நிர்வாகம் சார்பில் விருதுகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் கண்ணகி, உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி டாக்டர் மதன்பாபு, பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் வின்சென்ட், மற்றும் 100-க்கும் மேற்பட்ட செவிலியர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் பேசிய மாவட்ட ஆட்சியர் கொரோனா காலக்கட்டத்தில் உங்களது பணி மிகவும் பாராட்டுக்குரியது என்றும், சமுதாயத்தில் சகிப்புத்தன்மையுடன் செயல்படும் உங்கள் முயற்சி பாராட்டுக்குரியது என்றும், அடுத்தவர்களிடம் நீங்கள் காட்டும் அன்பு, பொறுமை, கவனிப்பு இவற்றால் அனைவரையும் மகிழ்விக்கும் உங்கள் வாழ்க்கையும் மகிழ்வாக இருக்க வாழ்த்துக்கள் என ஆட்சியர் பாராட்டினார்.

# காட்டு யானை அருகே சென்று சேட்டை செய்த நபர் கைது



தருமபுரி, மே, 13 –

தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் அருகே ஆக்ரோஷமான காட்டு யானை அருகே சென்று சேட்டை செய்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் வனச்சரக பகுதி, யானைகளின் வாழ்விடமாக உள்ளது. இதன் காரணமாக வனப்பகுதியில் சுற்றுலா வாகனங்கள் உள்ளிட்ட யாரும் வாகனங்களை நிறுத்தவும், வாகனங்களில் இருந்து இறங்கவும் கூடாது என வனத்துறை சார்பில் ஆங்காங்கே அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஒகேனக்கல் அருகே சில நாட்களாக ஒற்றை ஆண் யானை ஒன்று சாலையோரம் நடமாடி வருகிறது. இந்த யானையை அவ்வழியே வாகனங்களில் செல்லும் சுற்றுலா பயணிகள் வேடிக்கை பார்த்தபடி செல்கின்றனர். இந்நிலையில், புதன்கிழமை ஒகேனக்கல்லுக்கு சுற்றுலா வந்த ஒரு குழுவில் இடம்பெற்றிருந்தவர் ஒற்றை யானையை பார்த்ததும் வாகனத்தை விட்டு இறங்கியுள்ளார்.

பின்னர் யானைக்கு வெகு அருகில் நடந்து சென்று வணங்கியுள்ளார். அதன்பிறகு, யானைக்கு முதுகு காட்டியபடி நின்று கேமராவுக்கு போஸ் கொடுத்துள்ளார். இவரது இந்த செய்கைகளின்போது அந்த ஒற்றை யானை மண்ணை காலால் உதைத்து சிதற விட்டும், செடிகளை ஆக்ரோஷமாக வளைத்து மிதித்தும் பிளிறுகிறது. சுமார் 1 நிமிடம் வரை அவர் இவ்வாறு யானை அருகே நின்று சேட்டைகளை செய்துவிட்டு திரும்பிச் செல்கிறார். இந்த காட்சிகளை அவருடன் வந்தவர்கள் வீடியோ பதிவாக்கியுள்ளனர். இந்த வீடியோ காட்சி சமூக ஊடகங்களில் வைரலாக பரவியது. இந்நிலையில், இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல், வனத்துறை செயலர் சுப்ரியா சாஹூ தெரிவித்துள்ளார்

# கல்லூரிக்கு சென்ற மகளை காணவில்லை என தாய் காவல் நிலையத்தில் புகார்

ஊத்துக்கோட்டை, மே, 13 –

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், கோட்டைக்குப்பம் கிராமம், பள்ளக்காலனி, பெருமாள் கோவில் தெருவில் வசித்து வந்தவர் இளம்பெண் சரண்யா (வயது20). இவர் பொன்னேரியில் உள்ள எல்.என்.ஜி கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்து வந்தார்.

கடந்த 4 ஆம் தேதி காலை கல்லூரிக்கு சென்று வருவதாக வீட்டில் கூறிவிட்டு சென்றார். பின்னர் வீடு திரும்பவில்லை. பல்வேறு இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. இதனால் காணாமல் போன தனது மகளை கண்டுபிடித்து தருமாறு சரண்யாவின் தாய் பூர்ணிமா நேற்று மதியம் பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்தார். எனவே போலீசார் வழக்கு பதிவு செய்து காணாமல் போன கல்லூரி மாணவி குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

# கன்னியாகுமரி சாலை விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம் நிவாரணம்: முதல்வர் உத்தரவு

சென்னை , மே.13-

கன்னியாகுமரி அருகே நடந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சமும், படுகாயமடைந்த 6 பேருக்கு தலா ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்க வேண்டுமென தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக முதல்வர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், செண்பகராமன்புதூர் கிராமம், லாயம் விலக்கு பகுதியில் நேற்று காலை நாகர்கோவிலில் இருந்து ரோஸ்மியாபுரம் சென்ற பேருந்தும், திருச்செந்தூரிலிருந்து நாகர்கோவில் வந்த நான்கு சக்கர வாகனமும் எதிர்பாராத விதமாக நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் சதீஸ் (37), கண்ணன் (23), அஜித் (22) மற்றும் அபிஷேக் (22) ஆகியோர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக்



கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் படுகாயமடைந்து ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வரும் சஜிதா (37), நிதிஸ் (22), விக்னேஸ் (22), நிசாந்த் (18), சஜின் (18) மற்றும் சிறுமி அனாமிகா (11) ஆகியோருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், படுகாயமடைந்த தீவிர சிகிச்சை பெற்று வரும் ஆறு நபர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன், என்று அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, திருச்செந்தூர் அருகே நடந்த கோயில் திருவிழாவில் நிகழ்ச்சியை முடித்துவிட்டு, கன்னியாகுமரியைச் சேர்ந்த இசை கச்சேரி குழுவினர், சுமோ வாகனத்தில் சொந்த ஊருக்கு இன்று காலை திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்களின் வாகனம், திருநெல்வேலி நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலை அருகே வந்தபோது எதிரே வந்த அரசுப் பேருந்தும் சுமோ வாகனமும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 4 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். விபத்தில் படுகாயமடைந்தவர்கள் நாகர்கோவில் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



▶ புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அரசு மருத்துவமனையில் அரசு தலைமை மருத்துவர் பெரியசாமி தலைமையில் உலக செவிலியர் தினம் கொண்டாடப்பட்டது, நிகழ்ச்சியில் ஆலங்குடி இந்தியன் ரெட் கிராஸ் சார்பாக சேர்மன் மருத்துவர் முத்தையா, பொருளாளர் ஜெயச்சந்திரன், இணைச்செயலாளர் லட்சுமி நாராயணன், செயற்குழு உறுப்பினர் திருமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு செவிலியர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.



▶ தென்காசி மாவட்டம் புளியங்குடி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் வேலை வாய்ப்பு நியமன ஆணை வழங்கும் விழா நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் எஸ். கண்ணன் தலைமை தாங்கினார், தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் எஸ்.ஆர். ரம்யா சிறப்புரை ஆற்றி 206 மாணவ, மாணவியர்களுக்கு தனியார்துறை நிறுவனங்களுக்கான பணி ஆணைகளை வழங்கிப் பாராட்டினார். ஆங்கிலத்துறைப் பேராசிரியர் ரஞ்சித் வரவேற்புரை வழங்கினார்,கல்லூரியின் வேலைவாய்ப்பு அதிகாரி கணேசன் நன்றியுரை வழங்கினார், விழாவிற்கான ஏற்பாட்டினைத் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலக நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரில் துணை வேளாண்மை விரிவாக்க மையத்தினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்



கீரனூர் , மே.13-

புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் வட்டாரம், கீரனூரில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், ரூ.38 இலட்சம் மதிப்பிலான துணை வேளாண்மை விரிவாக்க மையத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சி தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நெடுஞ்சாலை நிலமெடுப்பு) பெ.வே. சரவணன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் 13 பயனாளிகளுக்கு ரூ.3.22 இலட்சம் மதிப்பிலான வேளாண் இடுபொருட்களை சட்ட அமைச்சர் வழங்கி பேசியதாவது;

முதல்வர் விவசாயிகளின் நலனுக்காக ஏராளமான நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவுத்துறையில் கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகளின் வங்கிக் கடனை தள்ளுபடி செய்து விவசாயிகளின் தோழனாக தமிழ்நாடு அரசு விளங்கி வருகிறது. இவ்விழாவில் ரூ.3.22 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நலத்திட்டங்களை விவசாயிகள் பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன் என பேசினார்.

இவ்விழாவில், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், வேளாண் இணை இயக்குநர் பெரியசாமி, குன்றாண்டார்கோவில் ஒன்றியக் குழுத் தலைவர் கே.ஆர்.என்.போஸ், செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்துறை) செல்வம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ரவிச்சந்திரன், உதவி இயக்குநர் (பொ) மதியழகன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# புதுப்பொலிவுடன் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான தொடக்கநிலை ஆயத்த பயிற்சிமையம்

அன்னவாசல் , மே.13-

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அன்னவாசல் வட்டார வளமையத்திற்கு உட்பட்ட கோட்டைமேட்டில் இயங்கி வரும் தொடக்கநிலை மற்றும் பள்ளி ஆயத்த பயிற்சி மையம் புதுப்பிக்கப்பட்டு குழந்தைகளை கவரும் வண்ண வரைபடங்கள் எண்ணும் எழுத்தும் எண்ணத்தை கவரும் சுவரோவியங்கள், எளிதில் குழந்தைகளை புரிந்து செயல்பட வைக்கும் பயிற்சிக் கருவிகளை கொண்டு வண்ணமயமாக வட்டாரக் கல்வி அலுவலர் அலெக்சாண்டர் மற்றும் செலின் ஆகியோர் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தனர்.

மாற்றுத்திறன் குழந்தைகள் பெற்றோருடன் கலந்துகொண்டனர். வட்டார வளமைய மேற்பார்வையாளர் ரோஸ்மேரி சகாயராணி முன்னிலையில் ஆசிரியர் பயிற்றுநர்கள் சபாபதி, விஜயகுமார், உமாமகேஷ்வரி,



ஒருங்கிணைப்பாளர் கவிதா இயன்முறை மருத்துவர் கோவிந்தசாமி இல்லம் தேடி கல்வி ஒருங்கிணைப்பாளர் ஆனந்த் ஆகியோர் வாழ்த்துரை வழங்க, வட்டாரக் கல்வி அலுவலர் அலெக்சாண்டர் பேசுகையில் மாற்றுத்திறன் குழந்தைகளை இம்மையத்திற்கு தொடர்ந்து அழைத்து வந்து பயன்பெறவேண்டும் மையத்தை புதுப்பிக்க உதவிய தன்னார்வலர்கள் முயற்சி மேற்கொண்ட மேற்பார்வையாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் அவர்களுக்கும் மைய சிறப்பு பயிற்றுநர்களுக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார். விழாவில் சிறப்பு பயிற்றுநர்கள் பாஸ்கரசேதுபதி, சந்திரா, கலைச்செல்வி, ரூபா மைய ஆசியர் ராஜாமணி மற்றும் உதவியாளர் சித்ரா ஆகியோர் கலந்துகொண்டு களப்பணியாற்றினார்கள்.

## உளுந்தூர்பேட்டையில் காலை உணவு திட்ட

# சமையலர்களுக்கான பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சியர் ஆய்வு



கள்ளக்குறிச்சி, மே,13_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஊரக வளர்ச்சிமற்றும் ஊராட்சிதுறை சார்பில் முதலமைச்சரின் காலை உணவு திட்ட சமையலர்களுக்கான பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஷ்ரவன்குமார் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார், முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அரசு தொடக்கப்பள்ளி மற்றும் நகராட்சி தொடக்கப்பள்ளியில் செயல்படுத்தப்பட உள்ளது, மதிய உணவு திட்டம் போன்று காலை உணவு வழங்கும் திட்டமாகும்.

இந்நிகழ்வில் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் ராஜவேல், உளுந்தூர்பேட்டை நகராட்சி தலைவர் திருநாவுக்கரசு, துணைத் தலைவர் வைத்தியநாதன் மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் ராஜா, கமலவள்ளி, கார்த்திகேயன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அரிமளத்தில் சர்வதேச தாவர ஆரோக்கிய தினம்

அரிமளம், மே.13-

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மற்றும் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து நடத்திய சர்வதேச தாவர ஆரோக்கிய தின விழா அரிமளம் ஊராட்சி ஒன்றிய கூட்ட அரங்கில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு அரிமளம் ஒன்றியக் குழுத்தலைவர் எம்.மேகலா முத்து தலைமைவகித்தார், எம். எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி ஆர்.ராஜ்குமார் நோக்கவுரையாற்றினார். நிகழ்ச்சியில் அரிமளம் வேளாண்மை உதவி





இயக்குநர் கே.பாண்டி பயிர் ஆரோக்கியத்தை பாதுகாக்க வேளாண்மைத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகளை எடுத்துரைத்தார்.

நிகழ்வில், அரிமளம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பி.பஞ்சநாதன், எ.சரவணராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நிகழ்வில் விவசாயிகள், ஊராட்சிமன்றத் தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள், சுயஉதவிக்குழு பெண்கள் உள்ளிட்ட சுமார் 100 பேர் பங்கேற்றார்கள். எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன கள அலுவலர் டி.விமலா அனைவரையும் வரவேற்றார், தொழில்நுட்ப அலுவலர் ஆர். வினோத்கண்ணா நன்றி கூறினார்.

# ஆலங்குடி அருகே ஜல்லிக்கட்டில் காயம் அடைந்தவர் சிகிச்சை பலனின்றி பலி

ஆலங்குடி, மே.13-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே வம்பன் கோவில் திருவிழாவை முன்னிட்டு கடந்த மாதம் 13ஆம் தேதி ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது.

இந்த ஜல்லிக்கட்டு போட்டிக்கு தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு தாலுகா தென்னலூரை சேர்ந்த சித்திரவேல் மகன் புகழேந்தி (17) என்பவர் தனது ஜல்லிக்கட்டு காளையை அழைத்து வந்தார். வாடிவாசலை நோக்கி புகழேந்தி தனது மாட்டினை வரிசையில் அழைத்து வரும்போது புகழேந்தி மார்பில் காளை பாய்ந்து புகழேந்தி பலத்த காயம் அடைந்தார்.

உடனே சிகிச்சைக்கு புதுக்கோட்டை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார், பலத்த காயமடைந்ததால் மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு புகழேந்தி கொண்டு செல்லப்பட்டார், தொடர் சிகிச்சையில் இருந்த புகழேந்தி சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

# மதுரை கோட்டத்தில் 4 ரயில் நிலையங்களில் பார்சல் மேலாண்மை அமைப்பு அமல்

மதுரை , மே.13-

மதுரை கோட்டத்தில் 4 ரயில் நிலையங்களில் பார்சல் மேலாண்மை அமைப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது என, அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து மதுரை ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ''விவசாயிகள், தொழிலதிபர்கள் , வர்த்தகர்கள், பண்ணை விளைபொருட்கள் ,வணிகப்பொருட்களை பெரிய நகரங்கள் மற்றும் பிற விரும்பிய இடங்களுக்கு கொண்டு செல்ல ரயில்வே பார்சல் சேவைகளை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். பிற போக்குவரத்து முறைகளுடன் ஒப்பிடும்போது, ரயில்வே பார்சல் சேவை வேகம், நம்பகம், சிக்கனமாக கருதப்படுகிறது.

பரந்த ரயில்வே நெட்வொர்க்கில் பார்சல் சரக்குகளின் இயக்கத்தை எளிமையாக்க, பார்சல் மேனேஜ்மென்ட் சிஸ்டம் (PMS) இந்திய ரயில்வேயில் செயல்படுத்தப்படுகிறது. இதையொட்டி, மதுரை கோட்டத்திலுள்ள மதுரை, திண்டுக்கல், நெல்லை, ராஜபாளையம் ஆகிய 4 முக்கிய ரயில் நிலையங்களில் இவ்வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தூத்துக்குடி, விருதுநகர், ராமேஸ்வரம், பாம்பன், செங்கோட்டை, திருச்செந்தூர் ஆகிய 6 ரயில் நிலையங்களுக்கு விரிவுப்படுத்தும் இறுதிகட்ட பணி நடக்கிறது.

மின்னணு எடை, கண்காணிப்பு வசதி மற்றும் SMS அறிவுறுத்தல்கள். கணினி மயமாக்கப்பட்ட கவுண்டர்கள் மூலம் பார்சல், சாமான்களை முன்பதிவு செய்யவும், சரக்குகளை மின்னணு எடை மூலம் எடையை தானாக அளவிடவும் உதவுகிறது. இதன்மூலம் ஒவ்வொரு சரக்குக்கும், பத்து இலக்க பதிவு எண் உருவாக்கப்பட்டு, பார்க்கோடு குறியீட்டின்படி சரக்கின் இருப்பிடம் குறித்த கண்காணிப்பை வழங்குகிறது.

பார்சல் கையாளுதல் ரயில்வேக்கு வருவாய் ஆதாரங்களில் முக்கியமான ஒன்று. 2022-23 ஆம் ஆண்டில் பார்சல் கையாளுதலின் மூலாக ரூ 10.97 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. மதுரை கோட்டத்தில் 15 ரயில் நிலையங்களில் 24 மணி நேர பார்சல் கையாளும் வசதி உள்ளது.'' இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருமயம் சண்முகநாதன் பொறியியல் கல்லூரியில் நேரடி வளாக நேர்காணல் : 37 மாணவர்கள் தேர்வு

திருமயம், மே. 13-

திருமயம் சண்முகநாதன் பொறியியல் கல்லூரியில் இறுதியாண்டு மாணவர்களுக்கான நேரடி வளாக நேர்காணல் மே-12 (சனிக்கிழமை) நடைபெற்றது. இதில் 37 மாணவர்கள் தேர்வு பெற்றனர். வளாக நேர்காணலுக்கு வந்திருந்த அனைவரையும் கல்லூரி வேலைவாய்ப்பு அலுவலர் ஆர்.சொர்ணலதா வரவேற்றார், கல்லூரி முதல்வர் குழ.முத்துராமு வாழ்த்துரை வழங்கிப் பேசினார்.

இந்த வளாக நேர்காணலில் சென்னையைச் சேர்ந்த பல்வேறு தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டன. இந்நிறுவங்களின் மனிதவளத்துறை மேலாளர்கள் வில்லியம்,



பாஸ்கர், நட்ராஜ் ஆகியோர் இவ்வளாக நேர்காணலை தனித்தனியாக நடத்தினர். இந்த நேர்காணல் எழுத்துத்தேர்வு, கலந்தாய்வு மற்றும் நேர்முகத்தேர்வு ஆகிய மூன்று கட்டங்களாக நடைபெற்றது.

இந்த வளாக நேர்காணலில் கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் அனைத்து துறை மாணவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இவ்வளாக நேர்காணலில் இறுதியில் 37 மாணவ, மாணவியர் தேர்வு பெற்றனர். அவர்களுக்கான பணி நியமன ஆணைகளை கல்லூரி தாளாளர் பிச்சப்பா மணிகண்டன் வழங்கி பாராட்டினார். இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிக் குழுவினர் செய்திருந்தனர். நிறைவாக கல்லூரி உதவி வேலைவாய்ப்பு அலுவலர் திவ்யசொப்னா நன்றி கூறினார்.

# அரியலூரில் எடப்பாடி பழனிசாமி பிறந்தநாள் விழா

அரியலூர், மே.13-

அரியலூரில் எடப்பாடி பழனிசாமி பிறந்தநாள் விழா, அதிமுகவினரால் கொண்டாடப்பட்டது. அதிமுக பொதுச் செயலாளர், தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர், எடப்பாடி பழனிச்சாமியின் 69 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, அரியலூர் மாவட்ட அதிமுக சார்பில், கட்சியின் மாவட்ட செயலாளரும், முன்னாள் அரசு தலைமை கொறடாவுமான, தாமரை எஸ். ராஜேந்திரன், அரியலூர் பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள, எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோரின் உருவ சிலைகளுக்கு, மாலை அணிவித்து, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

மேலும் அரியலூர் நகர அதிமுக சார்பில், அரியலூர் பெருமாள் கோயிலில், எடப்பாடி பழனிச்சாமி பெயரில் சிறப்பு வழிபாடு நடத்தி, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது, அரியலூர்



மாவட்ட மாணவரணி சார்பில், அரியலூர் பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலில் சிறப்பு வழிபாடு நடத்தி, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில், அதிமுக அரியலூர் மாவட்டச் செயலாளரும், முன்னாள் அரசு தலைமை கொறடாவுமான தாமரை எஸ். ராஜேந்திரன், கூட்டுறவு பால் பண்ணை தலைவர் கல்லங்குறிச்சி பாஸ்கர், நகரச் செயலாளர் ஏ. பி. செந்தில், மாவட்டப் பொருளாளர் அன்பழகன், ஒன்றியச் செயலாளர்கள் பொய்யூர் பாலசுப்பிரமணியன், நல்லாம்பத்தை செல்வராஜ், மாவட்ட மாணவர் அணி செயலாளர் ஓ.பி. சங்கர், மாவட்ட வழக்கறிஞர் அணி செயலாளர் வெங்கடாஜலபதி, மாவட்ட மகளிர் அணி செயலாளர் ஜீவா அரங்கநாதன், வழக்கறிஞர்கள் ராம.கோவிந்தராஜன், கோபாலகிருஷ்ணன், எஸ். வி சாந்தி, குலோத்துங்கன், சுகுமார், எட்மண்ட் அறிவழகன், நகர தொழில்நுட்ப பிரிவு நிர்வாகி வசந்தகுமார், ஒன்றிய கவுன்சிலர் வைப்பம் சிவபெருமாள், கடுகூர் முருகன், ஒன்றிய துணைச் செயலாளர் பொய்யூர் வேலுச்சாமி, நகர நிர்வாகிகள் நாகராஜன், கருணாநிதி, உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# குற்றாலம் வளர்ச்சிப் பணிகள் விழாவில் எம்எல்ஏ புறக்கணிப்பு : நகர காங்கிரஸ் சார்பில் ஆட்சியரிடம் மனு

தென்காசி, மே.13-

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நடைபெற்ற வளர்ச்சி பணிகள் துவக்க விழாவில் தென்காசி எம். எல்.ஏ வை புறக்கணித்தது சம்பந்தமாக தென்காசி மாவட்ட ஆட்சியர் துரை. ரவிச்சந்திரனிடம் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மாடசாமி ஜோதிடர் தலைமையில் மனு அளித்தனர், அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது,

எங்களது மாவட்ட காங்கிரஸ் தலைவரும், தென்காசி சட்டமன்ற உறுப்பினருமான எஸ். பழனி நாடார் கடந்த சட்டமன்ற கூட்டத்தில் தென்காசி குற்றாலம் மெயின் அருவி வளர்ச்சிக்கான கோரிக்கை வைத்தார், அதன் பயனாக தமிழக அமைச்சர் குற்றாலம் மெயின் அருவி வளர்ச்சிக்கு நிதி வழங்கினார். மேற்கண்ட வளர்ச்சிப் பணிகளின்



அடிக்கல் நாட்டு விழா 11-5-2023 அன்று குற்றாலத்தில் நடைபெற்றது. அதில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ். பழனி நாடார் அழைக்கப் படவில்லை அந்த நிகழ்வைக் கண்டு தென்காசி நகர காங்கிரஸ் கமிட்டியினர் அதிர்ச்சி அடைந்தோம். இந்த நிகழ்வுக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுத்து இதுபோன்ற நிகழ்வுகள் இனி நடைபெறாமல் தாங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் உதய கிருஷ்ணன், மாவட்ட பொதுச் செயலாளர்கள் ஏ ஜி எம் கணேசன், காஜாமைதீன், கவுன்சிலர்கள் ரபீக், சுப்பிரமணியன், நகர துணைத் தலைவர் தேவராஜன், மாவட்டச் செயலாளர்கள் கண்ணன், சபரி முருகேசன், வட்டாரத் தலைவர் குற்றாலம் பெருமாள், பொருளாளர் ஈஸ்வரன், பீர்முகம்மது, பிரேம்குமார், லட்சுமணன், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

13.05.2023 ❖ வரலாறு

# எடப்பாடி கே.பழனிச்சாமி பிறந்த நாள். ஸ்ரீ மகாகால பைரவர் திருக்கோவிலில் சிறப்பு பூஜை, அன்னதானம்



திருவள்ளூர், மே, 13 –
தமிழக முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி கே.பழனிச்சாமியின் பிறந்தநாள் விழா நேற்று தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கொண்டாடப்பட்டது. திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றிய அதிமுக இளைஞரணி சார்பில் எடப்பாடி கே.பழனிச்சாமி பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

இதை முன்னிட்டு தொம்பரம்பேடு கிராமத்தில் உள்ள ஸ்ரீ மகா காலபைரவர் திருக்கோவிலில் எடப்பாடி கே.பழனிச்சாமியின் பெயரில் சிறப்பு பூஜைகள், அபிஷேகங்கள் உள்ளிட்டவை நடைபெற்றது. இதன் பின்னர் 500 பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும், பொது மக்களுக்கு இனிப்பு வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளுக்கு, எல்லாபுரம் ஒன்றிய அதிமுக இளைஞரணி செயலாளர் கே.விமல் என்றகோபிநாத்தலைமை தாங்கினார். இதில், சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் வடக்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளரும், எல்லாபுரம் வடக்கு ஒன்றியசெயலாளருமான கே.எஸ்.விஜயகுமார் சிறப்பு பூஜையில் கலந்து கொண்டார். இதன் பின்னர், அன்னதான நிகழ்ச்சியை துவக்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தொம்பரம்பேடு முன்னாள் கிளை செயலாளர் எஸ்.பி.கோதண்டன், ஒன்றிய குழு உறுப்பினர் லதா அசோக், ஊத்துக்கோட்டை பேரூராட்சி மன்ற உறுப்பினர் எம்.ஆர்.எஸ். ஆனந்தி, பொதுக்குழு உறுப்பினர் ரத்தினம், தாராட்சி ஊராட்சி மன்ற தலைவர் சிவகாமி செஞ்சிவேல், துணைத்தலைவர் வேலு, எல்லாபுரம் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் எம்.கார்த்திக், தாராட்சி ஊராட்சி இளைஞரணி ரேவந்த், நிர்வாகிகள் பிரேம், லோகேஷ், இளங்கோ, சரவணன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை நிர்வாகிகளும், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கருணாநிதி நூற்றாண்டு விழா மே 20–ல் திமுக உயர்நிலை செயல்திட்டக்குழுக் கூட்டம்



சென்னை, மே, 13 –
முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டு விழா குறித்து விவாதிக்க வரும் மே 20-ம் தேதி திமுக உயர்நிலை செயல் திட்டக்குழுவின் கூட்டம் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள் செய்தியில், "திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில், திமுக உயர்நிலைசெயல்திட்டக் குழுக் கூட்டம் வரும் 20.05.2023 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெறும்.

அதுபோது உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். இந்தகூட்டத்தில்தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழா குறித்து விவாதிக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

# தமிழக முதல்வருக்கு தபால் மூலம் கோரிக்கை மனுக்களை அனுப்ப முயன்ற இந்து மக்கள் கட்சி மாநிலச் செயலாளர் கைது



சீர்காழி, மே, 13 –
மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் இந்து மக்கள் கட்சி மாநில செயலாளர் சுவாமிநாதன் தலைமையில் தமிழக முதல்வருக்கு இயற்கை வள சுரண்டு சட்டத்தை வாபஸ் பெற வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளாக சட்ட விரோதமாக சொத்து சேர்த்த அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொள்கையை அமல்படுத்த வேண்டும்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும், மதம் மாறியவர்களுக்கு இந்து சாதி சான்றிதழ் வழங்கக்கூடாது உள்ளிட்ட ஐந்து கோரிக்கைகளை வலியுறுத்தி தபால் மூலம் மேற்கண்ட கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை அனுப்ப முயன்ற இந்து மக்கள் கட்சி மாநிலச் செயலாளர் சாமிநாதன், மாவட்ட அமைப்பாளர் பாலாஜி, கொள்ளிடம் ஒன்றிய செயலாளர் சொக்கலிங்கம், மாவட்ட செயலாளர் ராஜேந்திரன், மாவட்ட இளைஞரணி நிர்வாகி தனசேகரன், நகரத் தலைவர் ராஜ்மோகன் உள்ளிட்ட ஆறுபேர்களை கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் வைத்தனர்.

# கஞ்சா விற்பனை செய்ய முயன்ற மூன்று வாலிபர்கள் சிறையில் அடைப்பு: 800 கிராம் கஞ்சா பறிமுதல்



திருவள்ளூர், மே, 13 –
திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி காவல் நிலைய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கர் தலைமையில் போலீசார் நேற்று ரோந்து பணி மேற்கொண்டனர். அகரம் பஸ் நிறுத்தம் அருகே சந்தேகத்துக்கு இடமான வகையில் நின்று கொண்டிருந்த இரண்டு வாலிபர்களை போலீசார் நிறுத்தி சோதனை செய்தனர். அப்பொழுது அவர்கள் விற்பனை செய்ய மறைத்து வைத்திருந்த சுமார் 500 கிராம் எடையுள்ள தமிழக அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

விசாரணையில் அந்த வாலிபர்கள் ஆரணி, சுப்பிரமணிய நகரைச் சேர்ந்த சந்தோஷ்சிவம் (வயது 20), நரேஷ் (வயது 19) என்பது தெரியவந்தது. ஆரணி சமுதாயக்கூடம் அருகே சந்தேகத்துக்கு இடமான வகையில் நின்று கொண்டிருந்த ஒரு வாலிபரை போலீசார் சோதனை செய்தனர். அப்பொழுது அந்த வாலிபர் விற்பனை செய்ய மறைத்து வைத்திருந்த சுமார் 300 கிராம் எடை கொண்ட தமிழக அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர்.

விசாரணையில் அவர் சின்ன கிளாம்பாக்கம் கிராமம், பெருமாள் கோவில் தெருவை சேர்ந்ததினேஷ் (வயது 21) என்பது தெரிய வந்தது. மூன்று வாலிபர்களையும் போலீசார் கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். மேலும், குற்றவாளிகள் மூன்று பேர் மீதும் வழக்கு பதிவு செய்து பொன்னேரி முதல்நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்திரேட்டு முன்னிலையில் ஆஜர் செய்தனர். பின்னர் அவரது உத்தரவின் பேரில் மூன்று வாலிபர்களையும் போலீசார் புழல் சிறையில் அடைத்தனர்.

# சென்னை மாநகராட்சி, நான்காவது மண்டல குழு கூட்டம் தலைவர் நேதாஜி கணேசன் தலைமையில் நடைபெற்றது



சென்னை, மே, 13 –
சென்னை மாநகராட்சி, நான்காவது மண்டல குழு கூட்டம் தண்டையார்பேட்டை திருவெற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன் தலைமை வகித்தார். மண்டல அதிகாரி மதிவாணன் முன்னிலை வைத்தார்.

இதில் திமுக, மதிமுக, கம்யூனிஸ்ட் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அப்போது தங்களுடைய வார்டுகளில் உள்ள குறைகள் குறித்தும், அதனை சரி செய்ய வலியுறுத்தி பேசினர். அதனை சரிசெய்வதாக மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் 34 முதல் 48 வரை உள்ள 15 வார்டுகளில் நடைபெறும் பணிகள் மற்றும் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி குறித்து தீர்மானம் நிறைவேற்றினர். அதில் 34 முதல் 48 வரை உள்ள வார்டுகளில் கழிவு நீர் கால்வாய், பக்கிங்காம் கால்வாய் தூர் வாருவதற்கு மூன்று கோடியே 94 லட்சத்தில் பணிகள் தொடங்க உள்ளது. புதிதாக தெரு விளக்கு அமைப்பதற்கு 2 கோடியே 40 லட்சம், பூங்கா பராமரிப்பு பணிக்கு 3 கோடியே 39 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு நான்காவது மண்டலத்துக்குட்பட்ட 15 வார்டுகளில் பணிகள் நடைபெற உள்ளது. இதற்காக மொத்தம் 11 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் சாலைகள் சீரமைப்பது, தற்போது வெயில் காலம் என்பதால் பொதுமக்களுக்கு தடையில்லா குடிநீர் வழங்குவது, தடையில்லா மின்சாரம் வழங்குவது, சொத்து வரி செலுத்துவதற்கு பொது மக்களுக்கு சிறப்பு முகாம் அமைப்பது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இந்தக் கூட்டத்தில் மாநகராட்சி அதிகாரிகள், சுகாதாரத் துறை அதிகாரிகள், குடிநீர் வாரிய அதிகாரிகள், மின்வாரிய அதிகாரிகள், வருவாய்த்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## டேட்டா என்ட்ரி பணியாளர்கள் நிறுத்தம்

# சென்னை மாநகராட்சியில் பிறப்பு, இறப்பு உள்ளிட்ட சான்றிதழ் பதிவேற்றும் பணி தேக்கம்

சென்னை, மே, 13 –
சென்னை மாநகராட்சியில் 'டேட்டா என்ட்ரி' பணியாளர்கள் நிறுத்தப்பட்டதால், பிறப்பு, இறப்பு சான்றிதழ் பதிவேற்றம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், ஆயிரக்கணக்கான சான்றிதழ்கள் தேக்கமடைந்துள்ளது.

சென்னை மாநகராட்சியில், தினசரி தலாநூற்றுக்கும்மேற்பட்ட பிறப்பு மற்றும் இறப்புகள் நடந்து வருகின்றன. இவற்றை மாநகராட்சி சுகதார பணியாளர்கள் https://chennaicorporation.gov.in/gcc/ என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்து வருகின்றனர். இவர்களுக்கு உதவ, நூற்றுக்கும் மேற்பட்ட 'டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர்கள்' நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குமாதந்தோறும் 9,000 ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டு வந்த நிலையில், மே 1ம்தேதி முதல் அவர்கள் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் பதிவேற்றம் மற்றும் திருத்தம் செய்ய முடியாமல், மாநகராட்சி சுகாதார அதிகாரிகள் திணறி வருகின்றனர்.

இதுகுறித்து, மாநகராட்சி சுகாதார அதிகாரிகள் கூறியதாவது: "சென்னை மாநகராட்சியில் தினசரி நூற்றுக்கணக்கான பிறப்பு, இறப்புகள் நடக்கின்றன. இவை, உரிய வகையில் ஆராய்ந்து மாநகராட்சி இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. எங்களுக்கு உதவுவதற்காக ஒப்பந்த பணியாளர்கள் இருந்தனர்.

அவர்கள் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டதால், எங்களால் அனைத்து சான்றிதழ்களையும் பதிவேற்றம் செய்ய முடிவதில்லை. இப்பணிகளுடன் சுகாதார பணிகளையும் சேர்ந்து பார்க்க வேண்டியுள்ளது. கூடுதல் பணி சுமையால், சென்னையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சான்றிதழ்கள் பதிவேற்றம் மற்றும் திருத்தம் செய்யாமல் தேக்கமடைந்துள்ளது. நிலைமை இப்படியே சென்றால், மேலும் சான்றிதழ்கள் தேக்கமடையும் சூழல் ஏற்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி மூலம்

# மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் சிலையை திறந்து வைத்தார்



மயிலாடுதுறை, மே, 11 –
தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் மயிலாடுதுறை மாவட்டம், நகராட்சிக்குட்பட்ட வரதாச்சாரியார் பூங்காவில் ரூ.15.98 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள பெண் சமூக சீர்திருத்தவாதி மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

மயிலாடுதுறையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு பெண் சமூகச் சீர்திருத்தவாதி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சியர் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து பேசியதாவது, செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் மயிலாடுதுறையில் வரதாச்சாரியார் பூங்காவில் பெண் சமூகச் சீர்திருத்தவாதி, எழுத்தாளர், பெண் கல்வியை வலியுறுத்தியர், தேவதாசி ஒழிப்பு இயக்கத்தின் முன்னோடி மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் நினைவினை போற்றும் வகையில் ரூ.15.98 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவச் சிலையை காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தமைக்காக தமிழ்நாடு முதலமைச்சருக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பிலும், மயிலாடுதுறை மாவட்ட பொது மக்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன், சீரகாழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா. மாவட்ட ஊராட்சிகுழுத்தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், மாவட்ட வருவாய் அலுவலர் முருகதாஸ், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பால ரவிக்குமார், மயிலாடுதுறை நகர் மன்றத் தலைவர் என்.செல்வராஜ், மயிலாடுதுறை ஒன்றியக் குழுத்தலைவர் காமாட்சி மூர்த்தி, கொள்ளிடம் ஒன்றியக் குழுத் தலைவர் ஜெயபிரகாஷ், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (மின்னியல்) கண்ணன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பெட்ரோலிய டேங்கர் லாரி மீது, அரசு விரைவு பேருந்து மோதி கோர விபத்து: 4 பேர் உயிரிழப்பு, 25 பேருக்கு தீவிர சிகிச்சை



சீர்காழி, மே, 13 –
மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே பாதரக்குடி புறவழிச்சாலையில் பழுதடைந்து நின்று கொண்டிருந்த டேங்கர் லாரியின் பின் பகுதியில் அரசு விரைவு பேருந்து மோதிய கோர விபத்தில் நான்கு பேர் உயிரிழப்பு, 25 பேர் படுகாயத்துடன் சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

திருத்துறைப்பூண்டியில் இருந்து அரசு விரைவு பேருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்னை நோக்கி சென்றுகொண்டிருந்தது. அப்பொழுது சீர்காழி அருகே பாதரகுடி என்ற இடத்தில் உள்ள புறவழிச்சாலை ஓரத்தில் பழுதடைந்து நின்ற டேங்கர் லாரி, இந்த லாரி நாகை மாவட்டம் நரிமணத்திலிருந்து பெட்ரோலிய குருடு ஆயில் ஏற்றி கொண்டு சென்னை சென்று கொண்டிருந்தது. அப்போது திடீரென டேங்கர் லாரி பழுதாகி சாலையோரம் நின்றது. அப்பொழுது லாரியின் பின்னால் அதிகவேகத்தில் வந்த அரசு பேருந்து டேங்கர் லாரி மீது மோதி பேருந்து ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்தது.

எதிரே சிதம்பரத்தில் இருந்து மயிலாடுதுறை நோக்கி வந்த இருசக்கர வாகனத்தில் வந்த சிதம்பரம் பள்ளிப்படை பகுதியைசேர்ந்த குருக்கள் பத்மநாபன், அவரது மகன் அருள்ராஜ் மற்றும் பாலமுருகன் ஆகிய மூன்று பேர் மீது அரசு பேருந்து மோதி இருசக்கர வாகனம் பேருந்து சக்கரத்தின் அடியில் சிக்கிக்கொண்டது. இதில் இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று பேரும் சம்பவ இடத்திலே உயிரிழந்தனர்.

மேலும் பேருந்து முன் பகுதி டேங்கர் லாரியில் மோதி முற்றிலும் பலத்த சேதமடைந்தது. இதில் முன் பகுதியில் அமர்ந்திருந்த நடத்துநர் சீட்டுடன் தூக்கி சாலையில் வீசப்பட்டு விழுந்தார். நடத்துனர் திருவண்ணாமலையை சேர்ந்த விஜயசாரதி சிகிச்சை பலன்றி உயிரிழந்தார். மேலும் பேருந்தில் பயணம் செய்த 25 பயணிகள் படுகாயத்துடன் சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விழுப்புரம் முதல் நாகப்பட்டினம் வரை நடைபெறும் நான்கு வழிச்சாலை பணிக்காக சாலை போடும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் சாலை முழுவதும் பழுதடைந்தும் ஒரு வழி பாதையாக மாற்றப்பட்டு இரு பக்கம் வரக்கூடிய பேருந்துகள் ஒரே சாலையில் சென்று வருகிறது. சாலைகள் போடும் பணியால் மின்விளக்கு இல்லாமல் இருளில் சாலை எது என தெரியாத அளவில் இருட்டு பகுதியாக உள்ளதால், டேங்கர் லாரி பழுதடைந்து நின்றது தெரியாமல் அரசு பேருந்து ஓட்டுனர் மோதி கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் மீது மோதியதே விபத்திற்கு காரணம் என போலீசார் முதற்கட்ட விசாரணையில் தெரிய வருகிறது.

இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா விபத்து குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறார். இறந்தவர்களின் உடல் சீர்காழி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. மேலும் பலத்த காயமடைந்தவர்கள் அனைவரும் சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்தில் சிக்கியவர்களை தமுமுக ஆம்புலன்ஸ், 108 ஆம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு வாகனங்கள் மூலமாக விரைந்து மீட்டு சிகிச்சையில் சேர்த்தனர்.


விபத்து தொடர்பாக சீர்காழி டி.எஸ்.பி லாமேக் வழக்குபதிவு செய்து பேருந்து ஓட்டுநர் பழனியை சேர்ந்த பிரதாப், லாரி ஓட்டுனர் கேரளாவை சேர்ந்த ஜான்பியர் ஆகிய இருவரையும் கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மேல்சிகிச்சைக்காக 5 பேர் சிதம்பரம் மருத்துவ கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளனர். மேலும் லாரியின் பின் பகுதி உடைந்து குருடாயில் வெளியே சாலையில் ஊற்றி கொண்டிருப்பதால் தீயணைப்பு துறை தீ பற்றி கொள்ளாமல் இருக்க நுரை தண்ணீரை அடித்து பாதுகாத்து வருகின்றனர். இதனால் மயிலாடுதுறை-சிதம்பரம் செல்லும் போக்குவரத்து மாற்று பாதையில் அனுப்பப்பட்டு வருகிறது.



# ராகுலுக்கு தண்டனை வழங்கிய நீதிபதியின் பதவி உயர்வு நிறுத்தி வைப்பு

# சுற்றுலா சென்ற இடத்தில் காட்டு யானையிடம் சேட்டை நபர் கைது





# இபிஎஸ் ஒரு சண்டிக்குதிரை எதுக்கும் பயன்படாது


| சென்னை / புதுக்கோட்டை | 13.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பக்ருதீன் அலி அகமது , இந்தியாவின் 5வது குடியரசுத் தலைவர் (பி.1905) (இ.1977)



சச்சிதானந்த ராவுத்ராய் , இந்திய ஒரிய மொழிக் கவிஞர் (பி.1916) (இ.2004)



தஞ்சாவூர் பாலசரஸ்வதி , இந்திய நடனக் கலைஞர் (பி.1918) (இ.1984)



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் , இந்திய மதகுரு (பி.1956)



## இன்றைய நினைவு நாள்

பி. ஆர். ராஜமய்யர் , தமிழக எழுத்தாளர் (பி.1872) (இ.1898)



தாராபாரதி , தமிழகக் கவிஞர் (பி.1947) (இ.2000)



ர். கே. நாராயண் , இந்தியப் புதின எழுத்தாளர் (பி.1906) (இ.2001)

